முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24 திகதி வரை
(03.09.2023 ஞாயிறு முதல் 10.09.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மண்ணையும் விண்ணையும் வெல்லும்
மகத்துவமிக்க ஞானம் கொண்ட
மன்னர்கள் மக்களை கண்டுள்ள
மாதவ பூமி பாரதம் தமிழகமே
2. தமிழக இந்தியா வருங்கால
தக்க நிகழ்வாக வார ஆசிதனை
நேமமுடன் அரங்க ஞானிகேட்க
நிலமதனில் சோபகிருது வேங்கை திங்கள் தன்னில்
3. தன்னிலே மூவையீர் திகதிமேல் அறுநான்கு திகதி வரை
தாமுரைக்க நடக்கும் நிகழ்வாக
இன்னாளில் வருங்கால பலனாக
இயம்புவேன் அகத்திய மகரிஷி யானும்
4. யானுரைக்க நிலவின் தென்துருவம்
உயர்வாய் தொட்ட பாரதமும்
ஞானபூமியாக உலக நாடுகளின்
நம்பிக்கை கொண்ட தேசமாகி
5. ஆகியே ஆதிக்கத் தேசநாடுகள்
அனைத்தும் வலிய வந்துமே
அகிலம் வியக்கத் தொடர்பு கூட்டி
ஆக்கமும் வளர்ச்சியும் பெருக மாற்றம்

6. மாற்றம்தனை இந்தியா தமிழகம்
மண்ணுலகில் கண்டு உயரும்
ஆற்றல் மிக்க ஆறுமுகன் பேரிலே
அளவிலா ஞானிகள் விஞ்ஞானிகள்
7. விஞ்ஞானிகள் வெளிப்பட்டு நன்கு
விண்ணுலகில் இன்னும் பல
விஞ்ஞான வெற்றி கிட்டி
விளம்பிடுவேன் சாதனை பெருகும்
8. பெருகவே தமிழகம் இந்தியா
பெருமை மிக்க மக்களுக்கு
தருமம் ஆக வழி விட்டு
தக்க வாய்ப்புத் தந்து இனிதே
9. இனிதே இந்தியா உலகளவில்
இன்னும் பல அற்புதம் நடத்தி
கனிவு மிக்க ஆளுமையாக
கனிவேலவன் அனுகூலம் தர
10.தருகவே நல்லாட்சி ஞானஆட்சி
தலைமைகள் ஞானவான்களாக
வருமுலகில் வழிநடத்த மாற்றம்
வழங்கிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17ம் நாள் 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 24ம் நாள் 10.09.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

மண்ணுலகையும், விண்ணுலகையும் வெல்லும் ஞானமும் ஆற்றலும் மிகுந்த மன்னர்களையும், மக்களையும் கொண்ட ஆற்றல் மிக்க தவபலம் மிகுந்திட்ட பாரதமே தமிழகமே இந்த தேசத்தின் வருங்கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக அன்புடன் அவதார ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனார் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க சோபகிருது வருடம் ஆவணி மாதம் 17ம்

நாள் **03.09.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் **24**ம் நாள் **10.09.2023** ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நிலவின் தென்துருவம்தனை தொட்டிட்ட பாரத தேசத்தினை அறிவு மிகுந்த ஞானம் மிக்க பூமியாக உலக நாடுகளின் நம்பிக்கையை பெற்றிட்ட தேசமாக ஆகியே ஆதிக்க நாடுகள் தாமாக முன் வந்து இந்திய தேசத்திடம் நட்பு கொண்டு தொடர்புகளை அதிகமாக்கி இந்திய தேசத்தின் வளர்ச்சிக்கும், ஆக்க செயல்களுக்கும் துணை நிற்குமப்பா.

உலக நாடுகளின் துணையுடனே வளர்ச்சி பெற்று பெருமாற்றம்தனை இந்தியா தமிழகம் அடைந்திடும் ஆற்றல் மிக்க முருகப் பெருமானின் துணையுடனும் முருகப் பெருமானின் ஆசி பெற்ற ஞானிகளும், விஞ்ஞானிகளும் இனி வரும் காலம் பாரத தேசத்திலே அதிகமாக வெளிப்பட்டு விண்ணிலும் வான்வெளியிலும் பலப்பல விஞ்ஞான வெற்றிகளை உருவாக்குவதோடு வெற்றியும் பெறுவர். உலக அரங்கில் இந்தியாவின் வான்வெளி சாதனைகள் பெருகிடுமப்பா.

உலகினில் இந்தியா தமிழகத்தின் தரும பலத்தினால் அதிக வாய்ப்புகள் உண்டாகி தருமத்தின் வழிவந்த மக்களுக்கு அவர்கள் மூலமாக இந்திய தேசம் விரைந்து நிகழ்த்துமப்பா. உலகினில் இந்திய அரசியல் கருணை மிகுந்த அரசியலாக முருகப்பெருமான் ஆசி பெற்ற அரசாக மாறிடும் நல்லாட்சி மலரும் அது ஞான ஆட்சியாக மாறிடும் நாட்டை ஆள்பவர்களுக்கும் உண்மை ஞானம் பெருகி ஞானவான்களாக மாறியே நாட்டினை வழி நடத்திட ஞானபூமியாக தேசம் மாறிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–